பக்கங்கள் 18+ 02

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 03 திங்கட்கிழமை 20.10.2025 | அதிர்வு 81

## மத்துகமவில் செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்த பெண்ணுக்கு மறியல்!



பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" படுகொலையின் சூத்திரதாரி 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# 'சாவகச்சேரி தக்ஷி'யை ஏமாற்றியே நேபாளத்துக்கு அழைத்துச் சென்றேன்

## சி.ஐ.டியிடம் செவ்வந்தி வாக்குமூலம்

இஷாரா செவ்வந்தியுடன் நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்ட யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த தக்ஷி என்ற பெண் தொடர்பில் இஷாரா செவ்வந்தி வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். 02

# தெற்கில் காணாமல்போனோரை நினைவுகூரும் நிகழ்வு: அழைப்புக்கு இன்னமும் பதிலளிக்காத ஜனாதிபதி அநுர

## காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம் கடும் விசனம்

தெற்கில் 1989 இல் ஜே.வி.பி எழுச்சியின்போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் சீதுவ – ரத்தொலுவவில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு அண்மையில் வருடாந்தம் நடைபெறும் நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்குமாறு தாம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்புவிடுத்துள்ள போதிலும், அவரிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை என தெற்கில் காணாமல்போனோரின் உறவினர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

1989 ஆம் ஆண்டளவிலே ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) எழுச்சியின்போது அதன் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். 02





# யாழில் போதை மாத்திரைகளுடன் மூன்று இளைஞர்கள் சிக்கினார்கள்

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் 3 இளைஞர்கள் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

17 தொடக்கம் 18 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 20 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘சாவகச்சேரி தக்ஷி’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகள் போன்று வேடம் அணிந்து நீதிமன்றத்துக்குள் நுழைந்த இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட இருவரே “கணேமுல்ல சஞ்சீவ” என்பவரைச் சுட்டுக்கொலை செய்துள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது.

இதனையடுத்து, இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து இந்த மாதம் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

நேபாள அரசின் உதவியுடன் இலங்கை பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்து மூன்று நாட்களாக நேபாளத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இஷாரா செவ்வந்தி இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இஷாரா செவ்வந்தியுடன் “கம்பஹா பபா”, “ஜேகே பாய்”, தக்ஷி என்ற பெண் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி உட்பட அனைவரும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் கடந்த 15 ஆம் திகதி நேபாளம் நோக்கிப் பயணித்து அவர்களை அன்று மாலை நாட்டுக்கு அழைத்து வந்தனர்.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இஷாரா செவ்வந்தி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 90 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், இஷாரா செவ்வந்தியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இஷாரா செவ்வந்தியின் முகத்திற்கு ஒத்த உருவத்தை கொண்ட பெண் ஒருவரைத் தேடி வந்த காலப் பகுதியில் “ஜப்னா சுரேஷ்” என்பவருக்குச் சாவகச்சேரியைச் சேர்ந்த தக்ஷி என்ற பெண் அறிமுகமானார் என்றும், வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி தக்ஷியை ஏமாற்றி நேபாளத்துக்கு அழைத்துச்சென்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

தக்ஷி என்ற பெண்ணுக்குச் சிங்கள மொழி தெரியாததால் அவருக்கு எதுவும் கூறாமல் அவரை நேபாளத்துக்கு ஏமாற்றி அழைத்துச் சென்றதாக இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இஷாரா செவ்வந்தி கிளிநொச்சியில் தலைமறைவாக இருந்த இடத்தைப் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## மத்துகமவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஷாரா செவ்வந்திக்குத் தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தார் எனக் கூறப்படும் களுத்துறை - மத்துகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பெண் உரிமையாளரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான வீட்டு உரிமையாளர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவங்களுக்கு மத்தியில் 1989 ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக வலய ஊழியரும், தொழிற்சங்கவாதியுமான எச்.எம்.ரஞ்சித் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகிய இருவர் கொல்லப்பட்டதன் பின்னர், அவர்களது உடல்கள் ரத்தொலுவ பகுதியில் கண்டறியப்பட்டன.

அதனையடுத்து அவர்களை நினைவு கூரும் வகையில் சீதுவ - ரத்தொலுவ சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி, பின்னாளில் தெற்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூருவதற்கான நினைவுத்தூபியாக மாற்றமடைந்தது.

அதன்படி தெற்கில் காணாமல்போனோரின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கிவரும் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காணாமல்போனோரின் குடும்பங்களின் பங்கேற்புடன் வருடாந்தம் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி இத்தூபிக்கு அண்மையில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெறும்.

அதற்கமைய இம்முறை எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்குமாறு தாம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்ததாகவும், இருப்பினும் அதற்கு ஜனாதிபதி தரப்பில் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ, பின்னர் பாதிக்கப்பட்ட தரப்பினரைச் சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு கோரி கடிதம் அனுப்பியதாகவும், அதற்கும் பதில் கிடைக்கவில்லை என விசனம் வெளியிட்டார்.

மேலும் வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் தாமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாகக் கூறும் ஜனாதிபதி, இந்த நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்பது குறித்து எந்தவொரு பதிலையும் வழங்காமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மிகுந்த கவலையடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் சம்பியனானது சென். மேரிஸ்

‘முரசு’ குழுமம் (A one media) நடத்தி வந்த யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

நேற்று மாலை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது.

இதில் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்ற சென். மேரிஸ், நடப்பாண்டின் யாழ். பிரிமியர் லீக்கின் சம்பியனானது.

















# இரண்டு வாகனங்கள் மோதிய விபத்தில் சாரதி ஒருவர் காயம்

கண்டி – யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியில் அலவத்துகொட,வெலிகந்த சந்திக்கு அருகில் இரண்டு கப் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அதிக வேகத்தில் பயணித்த கப் ரக வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு கப் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது கப் வாகனம் ஒன்றின் சாரதி காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



### மட்டக்களப்பு மாநகர சபையால்

# புதிய கல்லடி பாலத்தில் அமைக்கப்பட்ட அலங்கார மின்னொளி வளைவு திறப்பு!

(வாலகிருஸ்ணா)

தீபத்திருநாளாம் தீபாவளியை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் புதிய கல்லடி பாலத்தில் அமைக்கப்பட்ட அலங்கார மின்னொளி வளைவு நேற்று (19) மாலை திறந்துவைக்கப்பட்டது.

இந்துக்கள் தீபத்திருநாளாம் தீபாவளியை கொண்டாடப்படவுள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் வகையில் இந்த அலங்கார மின்னொளி வளைவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபை பிரதி முதல்வர் டினேஸ், மாநகர சபை ஆணையாளர் என்.தனஞ்செயன், மாநகரசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டு திறந்துவைத்தனர்.

மின்னொளி அலங்கார வளைவு திறக்கப்பட்டதை தொடர்ந்து வானவேடிக்கைகளும் நடைபெற்றன.மாநகர சபையின் ஊழியர்களின் அயராத முயற்சியால் கல்லடி பாலத்தில் அழகான வளைவாக இது அமைக்கப்பட்டுள்ளது.



# வாகனத்தில் கருவாட்டுக்குள் போதை மாத்திரைகள்

## இளைஞர் ஒருவரை கைது செய்த வவுனியா பொலிஸார்

(கி.வசந்தன்)

வவுனியாவில் 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண விஜயமுனியின் ஆலோசனையில் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் விமல் பியரட்ன தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

வவுனியா, ஏ - 9 வீதி ஊடாக வவுனியா நகரை நோக்கிப் பயணித்த பொலிரோ ரக வாகனத்தை இ.போ.ச. சாலைக்கு அருகில் மறித்த பொலிஸார் விசேட சோதனையை மேற்கொண்ட போது அந்த வாகனத்தில் கருவாட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் போதை மாத்திரைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து அந்த மாத்திரைகள் மற்றும் வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

அந்த வாகனத்தில் இருந்து 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும் கைது செய்யப்பட்டார். மேற்படி நபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.














# புண்ணிய மகோற்சவத்தில் சஜித் தம்பதி

வரலாற்றுச் சிறப்புமிக்க அனுராதபுரம் தந்திரிமலை ரஜமகா விகாரையின் வருடாந்த கடின புண்ணிய மகோற்சவம் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் திருமதி ஜலனி பிரேமதாஸ ஆகியோரின் ஒத்துழைப்புடன் இடம்பெற்று வரும் இந்த கடின மகா புண்யோத்சவம், இந்த ஆண்டும் பக்தர்களின் பங்கேற்புடன் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது.

மகா விகார வங்சிக்க ஷ்யாமோபாலி மகா நிகாயவின் மல்வத்து பீடத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதி தலைமை சங்கநாயக்கரும் வரலாற்றுச் சிறப்புமிக்க தந்திரிமலை ராஜமகா விஹாரையின் விகாராதிபதியுமான சங்கைக்குரிய தந்திரிமலை சந்திரரதன நாயக்க தேரரின் ஆசிர்வாதங்களுடனும் பங்கேற்புடனும் இந்தப் புண்ணிய நிகழ்வுகள் இடம்பெற்றன.










நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முடக்கும் திட்டம்

இலங்கையில் மாகாண சபை முறைமை முடக்கப்படுவது இந்திய இராஜதந்திர நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணானது என்று முன்னாள் அரசியல்வாதியும் இராஜதந்திரியுமான தயான் ஜயதிலக தமது பிந்திய கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா இலங்கையின் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்காக திறந்துவிட்ட மாகாண சபை முறைமை முடக்கப்படுவது தவறு என்ற சாரப்பட அந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

இந்திரா காந்தியின் சிறப்புத் தூதர் ஜி. பி. பார்த்தசாரதியின் முன் முயற்சியின் பலனாகக் கிடைத்தது மாகாண சபை முறைமை. அந்தப் பார்த்தசாரதியின் கீழ் இளம் உதவியாளராக இருந்தவர்தான் இப்போது இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியன் ஜெய்சங்கர். அவரும் இடம் பெற்றிருக்கின்ற இந்திய அரசினுடைய ஆதரவை பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் நிர்வாகம் இவ்வாறு இந்திய ராஜதந்திரத்திற்கு முரணாக மாகாண சபை முறைமையை முடக்க முயற்சிக்கக் கூடாது என்று தயான் ஜயதிலக சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இலங்கையின் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்திருந்த சமயம், அந்த முதலாவது வடக்கு - கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல், இளைஞர் விவகார அமைச்சராக இருந்தவர்தான் தயான் ஜயதிலக. அதனால் மாகாண சபை முறைமை குறித்து வலியுறுத்துவதற்கான தார்மீக கடப்பாடும் பொருத்தமும் கூட அவருக்கு இருக்கின்றன என்று கூறலாம்.

அவர் தமது கட்டுரையில் இன்னொரு அதிர்ச்சிகரமான விடயத்தையும் குறிப்பிட்டு இருக்கிறார்.

பெலவத்தையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஜே. வி. பி. தலைவர்கள் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளை ஒழிப்பதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான யோசனையை முன்னெடுக்கின்றனர் எனவும், அதற்காகவே மாகாணங்களுக்கான தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றனர் எனவும் சிங்கள மொழி ஊடகவியலாளர் சம்பத் தேசப்பிரிய தகவல் வெளியிட்டுள்ளார் என்று தயான் ஜயதிலக தமது கட்டுரையில் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

மாகாண முறைமையை நிரந்தரமாக முடக்கும் தனது திட்டம் தொடர்பில் இந்தியாவிலிருந்து எழக் கூடிய எதிர்ப்புகளை, வடக்கு மற்றும் கிழக்கில் இந்திய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பெரிய பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, தவிர்க்கலாம் என்றும் அதன் ஊடாக மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்புகளையும் நடுநிலையாக்க முடியும் என்றும் ஜே. வி. பி. நம்பலாம் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

எது, எப்படியாயினும் மாகாண சபைகள் தொடர்ந்து 'காணாமல் போனதால்' ஏற்பட்ட வெற்றிடம், தீவு முழுவதும் சமூகங்களின் மீது வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கூட்டு நிறுவனங்கள் நடத்தும் கொள்ளையை தடுத்து நிறுத்துவதற்கான இயலாமையை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் சுட்டுவது முற்றிலும் உண்மை.

# வவுனியா இளைஞர் ஒருவர் புத்தளத்தில் பரிதாப மரணம்

புத்தளம் – முந்தல் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பட்டுலுஓயா பகுதியில் உள்ள இறால் பண்ணையில் நீர்த் தொட்டியில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.



உயிரிழந்தவர் வவுனியாவை சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் வலிப்பு நோய் ஏற்பட்டு நீர்த் தொட்டியில் வீழ்ந்தார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# பாரிஸ் புற நகர்ப் பகுதியில் புதிய தமிழ்ப்பள்ளி ஆரம்பம்

பாரிஸின் புறநகர் பகுதியான எயட னம் முளைந மாவட்டத்தில் குழளளநள நகரில் பிராங்கோ தமிழ்ச் சங்கம் போஸ் இன் தமிழ்ச் சோலைப் பள்ளியின் அங்குரார்ப் பண நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது.

நிகழ்வில் Fosses நகரசபை முதல்வர் திருமதி Jacqueline HAESINGER மற் றும் நகர மன்ற உறுப்பினரும், தகவல் தொடர்பு, உள்ளூர் மற்றும் சமூக வாழ்க் கைக்கான பிரதிநிதி Christophe LUCAS Tk , நகரமன்ற உறுப்பினரும் கலாச்சாரம் மற்றும் சர்வதேச தொர்பாடலுக்கு பொறுப் பான Franck BLEUSE வும் கலந்து கொண்டனர்.

தமிழர் பண்பாட்டுக’கு அமைய மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வான , நகரசமை முதல்வரின் உரை, மற்றும் மாணவர்கள் சிறப்பு நிகழ்ச்சியுடன்சிறப்புற இடம்பெற்றுள்ளன.

குழளளநள நகரில் வசிக்கும் தமிழ் மக்களாக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த சங்கமானது அவர்களின் அடுத்த தலைமுறைக்களுக்கு தங்கள் தாய் மொழியையும், கலாச்சாரத்தையும் கடத்தும் இந்த முயற்சியை பாராட்டு வதுடன். உங்களுடைய அனைத்து முயற்சிற்கும் நகரசபை துணை நிற்கும் என நகரசபை முதல்வரின் உரையில் தெரிவித்தார்.

மாணவர்கள் அனைவருக்கு போஸ் பிராங்கோ தமிழ்ச்சங்கத்தின் சார்பில் தமிழ் அரிச்சுவடி மற்றும் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. Fosses வாழ் தமிழ் மக்க ளின் சிறந்த வரவேற்புடனும் நிகழ்வு இடம்பெற்றது.









# வவுணதீவில் காட்டு யானை தாக்கியதில் நான்கு பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

வவுணதீவு பொலிஸ் பிரிவில் காட்டு யானை தாக்கியதில் நான்கு பிள்ளைகளின் தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை (20) அதிகாலை மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பன்சேனை, வாதகல்மடு எனும் கிராமத்தில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த பெண்ணே இவ்வாறு காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அந்தப் பெண் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் தகரத்தால் அமைத்த குறித்த வீட்டினுள் இருந்த நெல்லை உண்பதற்காக வந்த காட்டு யானை வீட்டுத் தகரத்தைப் பிரித்து உள்ளே சென்றுள்ளது.

இதனைக் கண்டு பயத்தில் வெளியே ஓடிய போது யானை தாக்கியுள்ளது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மரணமானவர் வயது 58 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயான வைரமுத்து மலர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



இந்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டு விசாணைகளை மேற்கொண்ட பின் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை எடுத்துச் செல்லுமாறு பணித்துள்ளார். வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தியின் அனுமதிக்கமைவாக பிரதேச செயலகத்தால் யானை தாக்கி இறந்தமைக்காக பத்து லட்சம் ரூபா நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முற்பணமாக மரண சடங்குக்கென இறந்தவரின் மகனிடம் ஒரு லட்சம் ரூபா காசோலையை கிராம உத்தியோகஸ்த்தர் மற்றும் அனர்த்த நிவாரண முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் வைத்தியசாலையில் வைத்து வழங்கினர்.







# உப்புக்கேணிக் குளத்துக்குப் பாதுகாப்பு வேலி உடனடியாக அமைக்கப்படுதல் வேண்டும்

## நகரசபை உறுப்பினர் கைலாயபிள்ளை வலியுறுத்து

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட உப்புக்கேணிக் குளத்துக்கான பாதுகாப்பு வேலி உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் ஓய்வுநிலை அதிபருமான கைலாயபிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனை வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உப்புக்கேணிக் குளமானது அண்மையில் தூர்வாரப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்படி குளம் மக்கள் பாவனை அதிகம் உள்ள வீதியோரமாக காணப்படுவதால் மாரி காலத்துக்கு முன்னர் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட வேண்டும்.

மாரி மழையில் குளம் நீரால் நிரம்பும் பட்சத்தில் உயிராபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயநிலை காணப்படுகிறது. எனவே உடனடியாக குளத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட வேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த தவிசாளர் குளத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்திருந்தார்.





# ஓய்வு பெற்ற பொலிஸாருக்குக் கௌரவிப்பு!

(தில்சாத் பர்வீஸ் )

நீண்ட காலமாக நாட்டுக்காக தமது சேவையை வழங்கி அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப்குமார வின் தலைமையில் இன்று (20) திங்கட்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதன் போது ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நினைவுச் சின்னங்கள், வாழ்த்துச் சான்றிதழ்கள், மற்றும் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# கல்முனை மாநகர சபைத் தேர்தல் விரைவில்; பழையவர்களும் கட்சிக்குள் வரலாம்!

## *பகிரங்க அழைப்பு விடுத்தார் ரவூப் ஹக்கீம்*

(எம்.என். எம்.அப்ராஸ்)

கல்முனை மாநகரசபைத் தேர்தல் நிச்சயம் இந்த வருடம் இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் வரவுள்ளது. இதில் உள்ள அனைத்து வட்டாராங்களை வென்றேடுக்க வேண்டும். எனவே பழையவர்களும் கட்சிக்குள் வரலாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், ரஹ்மத் மன்சூர் தலைமையில் கல்முனையில் நேற்று (19) மாலை இடம் பெற்ற சமகால அரசியல் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

மாகாண சபைத் தேர்தல் இதற்கு அப்பால் வரவுள்ளது. இதில் பலருக்கு வாய்ப்பு உள்ளது. அந்த வாய்ப்பில் எதிர்கால மாகாண ஆட்சியில் பதவிகளும் மிச்சம் உள்ளன. இதையெல்லாம் யாரும் தட்டி பறிக்க விரும்பினால் எல்லோரும்ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் வர வேண்டும். யாரும் வெளியில் நிற்க வேண்டிய அவசியமில்லை. எலோருக்கும் இதைப் பகிரங்கமாகச் சொல்லி உள்ளோம் இப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் முஷாரப் வந்துள்ளார். அதாவுல்லாவும் வருவது பற்றியும் பேசப்படுகிறது.



இங்கு உள்ள ஏனைய பழையவர்களும் கட்சிக்குள் வரலாம். வரத்தான் வேண்டும்.– என்றார்.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர், உப தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# கிண்ணியா தோனா கடற்கரையில் சிறுவர் பூங்கா தடுப்புச் சுவருக்கு அடிக்கல்

கிண்ணியா தோனா சிறுவர் பூங்காக் கடற்கரையில் கடல் அரிப்பு சுவர் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (18) இடம் பெற்றது.

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நீண்ட காலமாக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள குறித்த கரையோர பகுதி சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இது கரையோர பாதுகாப்பு திணைக்களம் ஊடான மேற்பார்வையில் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இதில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ.ஆர். எம்.அஸ்மி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மாற்றுத்திறனாளிகளை அடுத்த நிலைமைக்கு கொண்டு செல்ல வேண்டியது சகலரதும் பொறுப்பு!

## திருமலை மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விசேட அலகுக்கு உரிய ஆசிரியர்களுக்கான சமுதாய மட்ட புனர்வாழ்வு தொடர்பான பயிற்சி நேற்று முன்தினம் மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கும் போது,

சாதாரண பிள்ளைகளுக்கு எவ்வாறான திட்டங்களை அரசின் கொள்கைகளின்ஊடாகநடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அதே அளவுக்கு மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கும் அரசால் பல்வேறுபட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சகல திட்டங்களும் அரசால் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இலவசமாக வழங்கப்படுகின்ற திட்டங்களைப் பயன்படுத்தி மாற்றுத் திறனாளிகளை அடுத்த நிலைமைக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு சகலருக்கும் உள்ளது. முக்கியமாக விசேட பிரிவுக்கு உரிய ஆசிரியர்களின் பங்கு மிகப்பெரியது.

மாற்றுத்திறனாளி பிள்ளைகள் தொடர்பான பல்வேறுபட்ட திட்டங்கள் சமூக சேவைகள் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான திட்டங்கள் தொடர்பான தெளிவூட்டல் இன்றைய பயிற்சியில் வழங்கப்படும் என்பதையும் இப்பயிற்சி நெறியைச் சரியான முறையில் பயன்படுத்தி மாற்றுத் திறனாளிகள் தொடர்பான ஆரோக்கியமானதொரு சூழ் நிலையை நாம் எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டும் .- என்றார்.

அடுத்த நிகழ்வாக மாவட்ட இணைப்பாளர் சமூக சேவைகள் உத்தியோகத்தர் த. பிரணவன் உரையாற்றும் போது,

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு திட்டத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். 06 மாதம் தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்களைப் புனர்வாழ்வுத் திட்டத்துக்கு உட்படுத்தி, மருத்துவக் குழுவினர் மூலம் பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம்.- என்றார்.

மாற்றுத்திறனாளிகளைத் தொழில் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பும் போது அவர்களை வீட்டு மட்டத்தில் தயார் செய்வயது செய்வது மிக முக்கியமான வேலை திட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக மாற்றுத் திறனாளி சிறுவர்களை வீட்டுமட்டத்தில் சரியான முறையில் புணருத்தாபனம் செய்வதன் ஊடாக தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கூடுதலான மாற்றுத் திறனாளிகளை தெரிவு செய்ய முடியும்.

அடுத்ததாக திருகோணமலை மாவட்டத்தில் பகல் நேர பராமரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. இப்பகல் நேர பராமரிப்பு நிலையத்துக்கு மாற்றுத்திறனாளி பிள்ளைகளை சரியாகத் தெரிவு செய்வதற்கு உரிய பொறுப்பு சகலருக்கும் உள்ளது. விசேட பிரிவுக்கு உரிய ஆசிரியர்கள் இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பராமரிப்பு நிலையத்தைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.- என்றார்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# ஒரு கிராமத்தின் சுவாசத்தில் குப்பை நுழைகிறதா?

அழிவை அழகு என்றெண்ணும் திட்டமிடலா? யாழ்ப்பாணத்தின் அரியாலை எனும் பசுமைத் தோட்டம் இன்று ஒரு அழுக்குப் புனிதநிலமாக மாற்றப்பட முயற்சிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் அழகிய கிராமப்புறங்களில் ஒன்றான அரியாலை குறிப்பாக, அரியாலை கிழக்கு மற்றும் காரைமுனங்கு பகுதிகள் இன்று ஒரு பெரும் பேராபத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ள முயற்சிக்கும் திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் அந்த ஊரின் இயற்கை, சுற்றுச்சூழல், வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலத்தை முழுமையாகவே சீரழிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இந்த திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பது ஏன் என்பது பல்வேறு அடிப்படைகளில் தெளிவாக விளக்கமளிக்கக்கூடியது.

மக்களின் நலனுக்காக எனும் பெயரில் நல்லூர் பிரதேச சபை அதன் தீவிர விளைவுகளை உணராமல் குப்பை மேடு அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்க இருப்பது மிக கவலையளிக்கக் கூடிய விடயமாக உள்ளது.

இந்த நிலையில் அந்தப் பிரதேச மக்களின் எதிர்ப்பும், எதிர்காலம் குறித்து அவர்களுக்குள்ள அச்சமும் வலுத்து வருகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பு, நிலத்தடி நீர் மாசுபாடு, சுகாதார சிக்கல்கள் எனப் பல்வேறு விளைவுகள் ஏற்படக்கூடிய நிலை உருவாகும் முன்னர் இந்தத் திட்டத்தின் தேவை, நேர்மை, மாற்று வழிகள் ஆகியவை குறித்து திறந்த உரையாடல் அவசியமாகிறது.

அரியாலை கிழக்கு மற்றும் காரைமுனங்கு பகுதிகள் மிகவும் அமைதியான, இயற்கை வளமிக்க, மக்களின் விவசாயம் மற்றும் கடல்சார்ந்த வாழ்வாதாரத்தால் வளம் பெற்ற பகுதிகளாகும். இங்கு திண்மக்கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்படும் திட்டமானது அந்த அமைதியான சூழலை முற்றிலும் பாதிக்கும். கழிவுகளின் துர்நாற்றம், காற்று மற்றும் நீர் மாசுபாடு, சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பன முற்றிலும் தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

பூம்புகார், நாவலடி, கிழக்கு அரியாலை கிராமங்களில் வாழும்பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் ஆரோக்கியம் பாதிப்படையும். அண்டியுள்ள கிராமங்களில் வாழ்பவர்களும் இதனால் பாதிப்படைவார்கள். இந்த மூன்று கிராமங்களிலும் குடும்பங்கள் தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றன. குப்பை மேடு அல்லது கழிவுகள் பிரிக்கும் நிலையம் இயங்கத் தொடங்கியவுடன் அங்குள்ள மக்கள் தினமும் மாசுபட்ட காற்றையும், தண்ணீரையும் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவர். இது குறிப்பாகக் குழந்தைகள், வயதானவர்கள், மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோருக்கு உடனடி பாதிப்புகளை ஏற்படுத்தும். சுவாச நோய்கள், தோல் நோய்கள் போன்றவை அதிகரிக்க வாய்ப்புண்டு.

கடல், கடற்கரை மற்றும் கடல் நீர் மாசடைந்து மீன்பிடித் துறை பாதிக்கப்படும். கழிவுகள் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்றால் அவை மழைநீர் மூலம் கடலுக்குச் செல்லும். இதன் காரணமாக கடல் நீர் மாசடையும். இது கடலில் வாழும் மீன்கள் போன்ற உயிரினங்களை அழிக்கக் கூடியதாக அமையும். மீன்பிடி செய்வோர் நேரடி பாதிப்புக்கு உள்ளாகுவர். அவர்களின் வாழ்வாதாரம் இடர்காலத்துக்குத் தள்ளப்படும்.

கிழக்கு அரியாலை யாழ் நகருக்குள் அமைந்துள்ள மக்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கக் கூடிய ஒரேயொரு கடற்கரை பிரதேசம். இது பாவனைக்கு ஒவ்வாததாக மாறும். யாழ்ப்பாண நகரின் மக்கள் கடற்கரையை ஓய்வுக்கான இடமாகப் பயன்படுத்துகின்றனர். குடும்பத்துடன் ஒரு சுவாசமான இடமாக அது காணப்படுகிறது. ஆனால் இங்கு கழிவுகள் நிர்வகிக்கப்படும் நிலையம் இருந்தால் அந்தப் பகுதி துர்நாற்றம் மற்றும் அழுக்கு சூழலில் மாறும். மக்கள் அங்கு செல்லமுடியாத நிலை ஏற்படும்.

விளைச்சல் நிறைந்த வயல்கள் வேளாண்மை செய்ய முடியாத நிலங்களாக மாறும். அரியாலைப் பகுதி செறிந்த மண்வளம் கொண்ட பகுதியாகும். இங்கு விளையும் பயிர்கள் ஊருக்கு பெருமை சேர்க்கின்றன. கழிவுகள் மண்ணில் விழும்போது அவை மண்ணின் இயற்கை வளங்களை அழிக்கின்றன. இரசாயன மாசுபாடுகள் மண்ணின் சத்துக்களைக் குறைக்கும். இதனால் பயிர்கள் நன்கு வளராது. வீதியில் நிற்கும் நிலம் போலவே விளையாத நிலமாக மாறிவிடும்.

அரியாலை கச்சான் என்பது பிரசித்தமானது. இங்குள்ள திட்ட நிலங்கள் அழிவடையும்.அரியாலை கச்சான் என்பது மிக முக்கியமான பாசனத்துக்கு ஏற்ற நிலமாகும். இவை நெல், காய்கறிகள், தென்னை, வாழை போன்றவற்றுக்குப் பயன்படும். இத்தகைய நிலங்களில் குப்பை மேடு அமைக்கப்படுமானால் மண்ணின் தரம் மட்டும் இல்லாமல் திட்டமாக இயங்கும் பாசன அமைப்புகளும் பாதிக்கப்படும். நிலங்கள் நிரந்தரமாக பயன்படுத்த முடியாத நிலங்களாக மாறும்.

மண்ணின் தரம் குன்றும். விவசாய நிலங்கள் தரிசு நிலமாக மாறும். தென்னந் தோட்டங்கள், பனங்கூடல்கள் அழிந்துபோகும். விவசாய நிலங்களை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களுக்கு மண்ணின் தரம் குன்றுவது என்பது உயிர் குன்றுவது போன்றது. குப்பை சேகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் நச்சுத்தன்மை மண்ணில் ஊறிவிடும். இதன் விளைவாக, தேங்காய்கள்,

தொடர்ச்சி▼

# ஒரு கிராமத்தின் சுவாசத்தில் குப்பை நுழைகிறதா?

**தொடர்ச்சி▲**

பனங்காய்கள், வெற்றிலைத் தோட்டங்கள் எல்லாம் பாதிக்கப்படும். விவசாயிகளின் உழைப்பும் நம்பிக்கையும் வீணாகும்.

கடல் கரை தாவரங்கள் மற்றும் கரை சுற்றுச்சூழல் அழியும். கரையோரங்களில் உள்ள தாவரங்கள் மண்ணை கரைசல் ஆகாமல் பாதுகாக்கின்றன. மாசுபாடு அதிகரித்தால் இவை வாழமுடியாத நிலை ஏற்படும். இது ஒரு சுற்றுச்சூழல் அழிவை ஏற்படுத்தும். கடல் சூழல் மட்டுமல்ல நிலத்தின் எடையைச் சுமக்கும் இயற்கை அடித்தளங்களும் அழியும்.

நிலத்தடி நீர் மாசடையும். இது இங்கு ஏற்கனவே நிலவுகின்ற குடி தண்ணீர் பிரச்சினையை இன்னும் மோசமாக்கும். நிலத்தடி நீர் என்பது குடிநீருக்கான முக்கிய ஆதாரமாக இருக்கிறது. கழிவுகளில் இருந்து வெளியேறும் நச்சுப் பொருள்கள் நிலத்தடி நீரில் ஊறும்போது மக்கள் குடிக்கும் தண்ணீர் நிலை மாறும். இதனால் வயிற்றுப்போக்கு, நீரிழிவு, புற்றுநோய் போன்ற நோய்களுக்கு வாய்ப்பு அதிகரிக்கும்.

மாசடைந்த நீரினால் தோல் நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு காணப்படும். கழிவுகளால் மாசடையும் நீர் தோலைத் தாக்கும். குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் இதில் அதிகம் பாதிக்கப்படுவார்கள். தோல் அரிப்பு, வீக்கம், புண்கள் போன்ற தோல் பிரச்சினைகள் ஏற்படும். இது ஒரு குடும்பத்தின் மருத்துவச் செலவினங்களை கூட உயர்த்தும்.

சூழலியல் சுற்றுலாத்துறையினை மையமாகக் கொண்டு, அபிவிருத்தி செய்யப்படக்கூடிய பிரதேசம், குப்பை மேடாக மாறி, முற்றாக அழிவடையும். அரியாலை ஒரு இயற்கை வளமிக்க சுற்றுலா வளமாக உருவாக்கப்படக்கூடிய இடமாக இருக்கிறது. கடற்கரை, விவசாயப் பசுமை, பறவைகள், மரவளங்கள், கடலோர நுழைவுகள் என பல இயற்கை அழகுகள் கொண்ட இடம். ஆனால் குப்பை மேடு அமைந்துவிட்டால் அந்த இடம் சுற்றுலா பயணிகளுக்கு அதிர்ச்சியாகவே அமையும்.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மக்களின் வாழ்வாதாரம் என்பது, விவசாயம், மீன்வளம், சுற்றுலா, பல்லுயிர் வளர்ப்பு ஆகியவற்றைச் சார்ந்தது. குப்பை மேடு இவை அனைத்தையும் அழிக்கும். ஒரு நிலம் மாசடையும் போது அந்த நிலத்தை வாழ்வாதாரமாகப் பயன்படுத்த முடியாது. மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

யாழ். நகரின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய வளங்கள் நிறைந்த பிரதேசம் நிரந்தரமாக அழிக்கப்படும். அரியாலைப் பகுதி யாழ். நகரத்தின் உணவு உற்பத்திக்கு முக்கிய பங்களிப்பு அளிக்கும் பகுதியாகும். இங்கிருந்து வரும் விவசாய உற்பத்தி, மீன்கள், தென்னந் தயாரிப்புகள் போன்றவை நகர வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கின்றன. இவை அழிந்துவிட்டால் யாழின் உணவுப் பாதுகாப்பும் பொருளாதாரமும் பாதிக்கப்படும்.

இங்கு வாழும் மற்றும் ஆண்டுதோறும் வரும் புலம்பெயர் பறவைகள் பாதிக்கப்படும். இது இயற்கை சூழலை அழிக்கும். இப்பகுதிக்கு ஆண்டுதோறும் ஏராளமான பறவைகள் பருவநிலையை ஒட்டி புலம்பெயர்ந்து வருகின்றன. இவை ஒரு பல்லுயிர் வளம், சுற்றுச்சூழல் சமநிலையின் சான்று. மாசுபாடுகள் இந்தப் பறவைகளை விரட்டிவிடும். பறவைகளின் வாழிடம் அழியும் போது அந்தச் சுற்றுச்சூழல் அழிவடையும்.

எமது உறவுகளின் நினைவுகளைத் தாங்கி நிற்கின்ற மயானத்தில் மூக்கைப் பொத்திக்கொண்டு இறுதிச் சடங்குகளை– கிரியைகளை நிறைவேற்றுகின்ற நினைவேந்தல்களை செய்கின்ற இடமாக மாறும்.

மயானங்கள் என்பது ஒரு சமூகத்தின் ஆன்மீக அடையாளம். அங்கு அமைதி, மரியாதை, நம்பிக்கை நிறைந்த சூழல் இருக்க வேண்டும். ஆனால் குப்பை மேடு அருகில் இருந்தால் இறுதிச் சடங்குகளை மூக்கைப் பொத்திக்கொண்டு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இது கலாசாரக் கட்டமைப்பை முற்றாகப் மாற்றும் செயலாகும்.

எமது மக்களின் முயற்சியால் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தடுக்கப்படும். இப் பகுதியில் உள்ள மக்கள் நீண்டகாலமாக தனியாராகவும், சமூகவழியாகவும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். விவசாய கூட்டுறவுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் என பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஒரு குப்பை மேடு திட்டத்தால் பாதிக்கப்படும் என்பது மிகவும் வேதனைக்கு உரியது.

உலகமெங்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக மக்கள் போராடி வருகின்றனர். அரியாலையூர் மக்களாகிய நாமும் நமது ஊரை பாதுகாப்பதற்காக நமது அழிகிய ஊரின் நிலம்,கடல்,நீர்வளம், தூய காற்று போன்ற இயற்கையின் கொடைகளை காப்பாற்றுவதற்காக போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். நல்லூர் பிரதேச சபை ஊர் மக்களுடன் எந்த வகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக்கூடிய குப்பைகளை அரியாலையில் வீசும் திட்டத்தை ஆரம்பத்திருப்பதானது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத அநீதியாகும். இயற்கை பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத் தளமாக எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரைக் குப்பை மேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாக கைவிட வேண்டும். எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையான எமக்கு மட்டுமானதல்ல. எதிர்கால தலைமுறைக்கும் சொந்தமானவையாகும். எமது ஊரின் இயற்கை வளங்களை பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு நமது தலைமுறைக்கு உண்டு. இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பை மேட்டு திட்டத்தை கைவிடுவது சாலச் சிறந்ததாகும்.

அரியாலையை அசுத்தத்தின் அடிமையாக மாற்றும் முயற்சி, வெறும் நகர திட்டமிடல் என்ற பெயரில் மறைக்கக்கூடிய விடயம் அல்ல. இது ஒரு சமூக, சுற்றுச்சூழல், சுகாதாரப் பிரச்சினையாகவே மாறி நிற்கிறது. மக்கள் எதிர்ப்பு மட்டுமல்ல, எதிர்காலக் கோர நிழல்களும் இந்தத் திட்டத்துக்கு எதிராகப் பேசுகின்றன. குப்பை மேடுகள் நகரங்களுக்கு தேவையானவை என்றாலும் அவை அமைக்கப்படும் இடங்கள் பசுமை நிலங்களாகவோ, மக்கள் வாழும் ஊர்களாகவோ இருக்கக் கூடாது என்பது உண்மை. மீறல்களும், மக்களின் நலனை புறக்கணிக்கும் நடவடிக்கைகளும் தொடரும் போது சமூக நலனைச் சார்ந்த போராட்டங்களும் வலுப்பெறக்கூடும். எனவே, நேர்மையான ஆலோசனைகளுடன் மாற்று திட்டங்களை ஆராயும் விழிப்புணர்வுடன் அரசு மற்றும் அதிகாரிகள் செயற்பட வேண்டும். அரியாலை காப்போம் என்ற முழக்கம் இன்று எழுமுகமாகிக் கொண்டிருப்பது எளிதில் காலம் கடந்து போகும் பசுமையான அழகு நிலத்தின் கண்ணீர் கதையாக மாறாமல் இருக்கவேயாகும்.



**மதுஷாயினி மதிவதனன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கு அரசு தயார்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக அரசு தயார் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. இந்நிலையில் தலைநகர் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை அதிகமாக பெய்யும் எனவும், தென் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் இந்தியா வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதை அடுத்து கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து ஆய்வு மேற்கொண்டு, ஆயத்த நிலை மற்றும் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், கரையோரங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முதல்வர் ஸ்டாலின்,

"வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் அதனை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளது. டெல்டா பகுதிகளில் விட்டுவிட்டு மழை பெய்வதால் பயிர்கள் சேதமடைந்து இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பொய் கூறுகிறார்.

மழையினால் பாதிக்கப்பட்டுள்ள திருவாரூர் மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில், கொள்முதல் பணிகளை தொய்வின்றி நடத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெறப்பட்டுள்ள நெல் மூட்டைகள் விரைவாக கிடங்குகளுக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கைகளை துரிதப்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எல்லாம் இரண்டு மாதங்களுக்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. விருதுநகர், தேனி, இராமநாதபுரம் நீலகிரி மாவட்டங்களில் அதிக மழை பெய்துள்ளது. இருந்தாலும் அங்கு எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படவில்லை." என்றார்.

இதேவேளை, ஆனைமலை அடுத்த பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோயிலை வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளத்தில் சிக்கிய காவலாளிகள் இருவரை தீயணைப்புத் துறையினர் நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு மீட்டனர்.

அத்துடன், குன்னூரில் தொடரும் கன மழையால், வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# வீட்டில் விற்பனைக்காக வைத்திருந்த நாட்டு வெடிகள் வெடித்து 4 பேர் பலி



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அருகே வீட்டில் விற்பனைக்காக வைத்திருந்த நாட்டு வெடிகள் வெடித்துச் சிதறியதில் 4 பேர் உயிரிழந்தனர்.

ஆவடி அருகே பட்டாபிராம் அடுத்த தண்டுரை பகுதியில் உள்ள ஒரு வீட்டில், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நேற்று நாட்டு ரக வெடிகள் விற்பனை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், நேற்று மதியம் 3 மணியளவில் அங்கு விற்பனைக்காக வைத்திருந்த நாட்டு வெடிகள் எதிர்பாராத வகையில் வெடித்துச் சிதறின. இதனால் வீடு முழுவதும் சேதமடைந்தது.

இதில், தீபாவளிக்கு பட்டாசு வாங்க வந்த திருநின்றவூர் நத்தம்மேடு பகுதியை சேர்ந்த சுனில்பிரகாஷ் (வயது 22), யாசின் (வயது 28) மற்றும் நாட்டு வெடி விற்பனையில் ஈடுபட்ட இருவர் என 4 பேர் தீக்காயமடைந்தும், இடிபாடுகளில் சிக்கியும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்து வந்த பட்டாபிராம் பொலிஸார் மற்றும் ஆவடி தீயணைப்பு நிலைய வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். உயிரிழந்த 4 பேரின் உடல்களை மீட்ட பொலிஸார், பிரேதப் பரிசோனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவ இடத்தில் ஆவடி பொலிஸ் ஆணையர் சங்கர், துணை ஆணையர் பெரோஸ் அப்துல்கான், ஆவடி வட்டாட்சியர் கண்ணன் உள்ளிட்டோர் ஆய்வு மேற்கொண்டு, விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்தனர்.

ஆவடி பொலிஸ் ஆணையர் சங்கர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நாட்டு வெடிகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்று விசாரித்து வருகிறோம். விசாரணை முடிவில்தான் விபத்துக்கான காரணம் தெரியவரும்." என்றார்.

இந்த விபத்து தொடர்பாக பட்டாபிராம் பொலிஸ் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.



# போதைப் பொருள்களை கடத்தி வந்த நீர்மூழ்கிக் கப்பலை அழித்த அமெரிக்கா

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து கரீபியன் கடல் வழியாக அமெரிக்காவுக்கு அதிவிரைவு படகுகள் மூலம் போதைப் பொருள்கள் கடத்தல் நடைபெற்று வந்தது.

கடந்த 2 மாதங்களாக போதைப் பொருள்களை கடத்திவந்த 6 அதி விரைவு படகுகளை அமெரிக்க படைகள் கரீபியன் கடலில் சுட்டு வீழ்த்தின. இந்த படகுகள் வெனிசுலாவில் இருந்து வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்நிலையில் கரீபியன் கடல் பகுதியில் இரவு நேரத்தில் ஒரு நீர்மூழ்கி கப்பல், பாதியளவு தண்ணீரில் மூழ்கிய படி வேகமாக சென்றுள்ளது. அதில் உள்ளவர்களையும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

அது போதைப் பொருள்கள் கடத்தும் நீர்மூழ்கி கப்பல் என உறுதி செய்யப்பட்டவுடன் அதை நடுக்கடலில் அமெரிக்க படைகள் குண்டு வீசி தகர்த்தன. இந்த தாக்குதலில் நீர்மூழ்கி கப்பலில் பயணம் செய்த இருவர் உயிரிழந்தனர். போதைப் பொருள் கடத்தலில் தொடர்புடைய இருவர் உயிருடன் பிடிபட்டனர். அவர்கள் ஈக்குவடார் மற்றும் கொலம்பியா நாட்டைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டது.

இந்த தாக்குதல் காணொலியை 'ட்ஷரூத் சோஷியல்' சமூக ஊடகத்தில் பகிர்ந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குறிப்பிடுகையில்,

"இந்த போதைப் பொருள்கள் நுழைந்திருந்தால், 25,000 அமெரிக்கர்கள் இறந்திருப்பர். கடத்தலில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவரும் வழக்கு விசாரணைக்காக அவர்களின் சொந்த நாடான ஈக்குவடார் மற்றும் கொலம்பியாவுக்கு திருப்பி அனுப்பப் பட்டனர்." என்று குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருள் ஏற்றி வந்த நீர்மூழ்கி கப்பல் எந்த நாட்டில் இருந்து புறப்பட்டது என்பதை அமெரிக்கா தெரிவிக்கவில்லை.

இந்த நீர்மூழ்கி கப்பல் ரகசிய கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்டு கொலம்பியாவிலிருந்து மத்திய அமெரிக்கா அல்லது மெக்சிகோவுக்கு போதைப் பொருள் கடத்தலுக்கு நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

# நெப்போலியன் காலத்து நகைகள் கொள்ளை: பிரான்ஸில் அருங்காட்சியகம் மூடப்பட்டது



பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் உள்ள இலூவா அருங்காட்சியகம். இங்கு மோனோலிசா ஓவியம் உட்பட வரலாற்று சிறப்புமிக்க 33,000 கலைப் பொருள்கள், சிற்பங்கள், நகைகள், ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள கலைப் பொருட்கள் மற்றும் விலைமதிப்பற்ற பொருள் கள் பல முறை திருடுபோயுள்ளன. கொள்ளை முயற்சி சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில் இந்த அருங்காட்சியகத்தில்நேற்றுமுன்தினம்ஒருகொள்ளை சம்பவம் நடைபெற்றுள்ளது. ஸ்கூட்டரில் வந்த கொள்ளையர்கள் அருங்காட்சியகத்தில் கட்டிட பராமரிப்பு நடைபெற்ற இடத்தின் வழியாக ஊடுருவியுள்ளனர்.

ஹைட்ராலிக் ஏணியை பயன்படுத்தி அருங்காட்சியகத்தில் நுழைந்த கொள்ளையர்கள், அப்போலோ வளாகத்தில் உள்ள பிரெஞ்சு மன்னர்கள் மற்றும் ராணிகள் பயன்படுத்திய 9 கிரீடங்கள் மற்றும் நகைகளை கொள்ளையடித்துள்ளனர். இது மன்னர் நெப்போலியன் காலத்து நகைகள் ஆகும்.

டிஸ்க் கட்டர் மூலம் நகைகள் வைத்திருந்த கண்ணாடி பெட்டியை வெட்டி கிரீடங்கள் மற்றும் நகைகளை கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த கொள்ளை சம்பவம் 7 நிமிடங்களில் முடிந்துள்ளது. நன்கு திட்டமிட்டு இந்த கொள்ளை சம்பவத்தை கொள்ளையர்கள் அரங்கேற்றியுள்ளனர் என பிரான்ஸ் நாட்டின் உள்துறை அமைச்சர் லாரன்ட் நுனஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் பிரபல அருங்காட்சியகத்தில் மிகப் பெரிய கொள்ளை சம்பவம் நடைபெற்றுள்ளதை அந்நாட்டு கலாச்சாரத்துறை அமைச்சர் ரச்சிதா ததி நேற்று காலை அறிவித்தார்.

இந்த கொள்ளை சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அருங்காட்சியகத்துக்கு ஏற்பட்ட சேதம் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. கொள்ளை சம்பவத்தையடுத்து, இலூவா அருங்காட்சிகம் நேற்று மூடப்பட்டது. அருங்காட்சியகம் முன்பு தடுப்புகள் அமைக்கப்பட்டன. அங்கு நேற்று பார்வையாளர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.



# காசாவில் மீண்டும் இஸ்ரேல் தாக்குதல்

ஹமாஸ் அமைப்பு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறியது என்று கூறி, நேற்று வான்வழித் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலிய படையினர், காசாவில் போர் நிறுத்தத்தை மீண்டும் செயற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

ரஃபாவில் தனது துருப்புக்களை நோக்கி தீவிரவாதிகள் தாங்கி எதிர்ப்பு ஏவுகணை மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், அதில் இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் இஸ்ரேலிய இராணுவம் கூறியதைத் தொடர்ந்து தெற்கு காசாவில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனினும் இஸ்ரேலிய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியில் எந்தவொரு மோதல்களும் குறித்தும் தமக்குத் தெரியாது என்று ஹமாஸ் கூறியுள்ளது.

அத்துடன்,இஸ்ரேலின் தாக்குதல்கள் நிலைமையை சரிவை நோக்கித் தள்ளக் கூடும் என்றும் ஹமாஸ் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், நேற்று மாலைக்குள், காசா முழுவதும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 44 பேர் கொல்லப்பட்டன என மருத்துவமனை தரப்புகள் தெரிவித்துள்ளன.





பக்கங்கள் - 02

கனடா முரசு

திங்கட்கிழமை 20/10/2025

## கனடாவில் படகு விபத்தில் 2 குழந்தைகள் உயிரிழப்பு




C2▶



# கனடாவுடன் வர்த்தக உடன்படிக்கை; இந்திய உயர்ஸ்தானிகர் விளக்கம்


சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் கனடா தீர்மானம் எடுக்க வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமா என இந்திய கனடாவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் தினேஷ் பத்நாயக் விளக்கமளித்துள்ளார்.

“கனடா எங்களுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடத் தயார் எனில், நாங்கள் மகிழ்ச்சியுடன் இணைந்து செயல்படுவோம்,” என்று பத்நாயக் கூறியுள்ளார்.

C2▶

# கனடிய பிரதமர் மார்க் கார்னி ஆசிய நாடுகளுக்கு விஜயம்



கனடா பிரதமர் மார்க் கார்னி, இந்த மாத இறுதியில் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு ஒன்பது நாள் அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

இந்த பயணத்தின் போது அவர் இரண்டு முக்கிய பன்னாட்டு உச்சி மாநாடுகளில் கலந்து கொள்கிறார்.

முதலில், கார்னி கோலாலம்பூரில் நடைபெறும் தென்கிழக்காசிய நாடுகள் சங்க உச்சி மாநாட்டில் பங்கேற்பார்.

அங்கு மலேசிய பிரதமருடன் சந்தித்து வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

அதன்பின், அவர் சிங்கப்பூர் பிரதமர் மற்றும் பிராந்திய வணிகத் தலைவர்களுடன் சந்தித்து, வர்த்தக தடைகள் நீக்கம் மற்றும் உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பது குறித்து விவாதிக்கவுள்ளார்.

கார்னியின் இறுதியாக தென்கொரியாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

அங்கு க்யோங்ஜு நகரில் நடைபெறும் ஆசிய – பசிபிக் பொருளாதார தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்.

மேலும், தனது தென் கொரியா பயணத்தின் போது ஹான்வா ஓசன் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளத்தையும் அவர் பார்வையிட திட்டமிட்டுள்ளார்.

இந்த நிறுவனம் கனடாவின் புதிய நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்திற்கான இறுதி போட்டியாளர்களில் ஒன்றாகும்.

மார்க் கார்னி ஒக்டோபர் 24 முதல் நவம்பர் 1 வரை ஆசியாவில் பயணம் மேற்கொள்ள உள்ளார்.




# கனடாவில் படகு விபத்தில் 2 குழந்தைகள் உயிரிழப்பு

கனடாவின் நோவா ஸ்கோஷியாவின் மேற்கு கலிடோனியா அருகே இடம்பெற்ற படகு விபத்தில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

லேக் ராசினியோல் ஏரியில் படகு விபத்துக்குள்ளானதாக அவசர அழைப்பு கிடைக்கப் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு ஆண் மற்றும் மூன்று குழந்தைகளுடன் பயணித்த படகு கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த இடத்துக்கு அவசர சுகாதார சேவை தீயணைப்பு படை மற்றும் கூட்டு மீட்பு ஒருங்கிணைப்புக் குழுவினர் விரைந்தனர்.

நோவா ஸ்கோஷியாவைச் சேர்ந்த 45 வயது ஆண் மற்றும் மூன்று குழந்தைகள் மீட்கப்பட்டு தேடுதல்-மீட்பு ஹெலிகாப்டரில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் இரண்டு குழந்தைகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த ஆண் மற்றும் மற்றொரு குழந்தை உயிருக்கு ஆபத்தற்ற காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த கடினமான நேரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஒட்டாவா – ஆல்டா விஸ்டா பகுதியில் கத்திக்குத்துக்குள்ளான இளைஞர் பலி





கனடாவின் ஒட்டாவா நகரின் ஆல்டா விஸ்டா பகுதியில் 21 வயது இளைஞர் ஒருவர் மீது கத்தி குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் மேற்படி இளைஞர் கொல்லப்பட்டார் என ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவசர சேவை பணியாளர்களுக்கு காயமடைந்தவர் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் பணியாளர்கள் அந்த இளைஞனை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

ஆனால், இளைஞர் அங்கு உயிரிழந்துள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டது. ரபேல் அடெண்டே என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது இந்த ஆண்டு ஒட்டாவாவில் நிகழ்ந்த 15 ஆவது கொலைச் சம்பவம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் அதே தெருவில் சில நாள்களுக்கு முன் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு பின் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**கனடாவுடன்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஒப்பந்தத்தை நிறுத்தியது கனடா என்பதனால் மீண்டும் ஆரம்பிப்பதும் கனடாவின் பொறுப:பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையே நம்பிக்கை மீண்டும் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதாகவும், முன்னாள் பிரதமர் மற்றும் பொலிஸார் வெளியிட்ட அவசரமான மற்றும் நியாயமற்ற குற்றச்சாட்டுகள் இப்போது கடந்தது என்று அவர் கூறினார்.

இதேவேளை, இந்தியா மற்றும் கனடா இடையே ஏற்கனவே வலுவான பொருளாதார உறவுகள் உள்ளன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அவற்றை மேலும் வலுப்படுத்தும் ஒரு அமைப்பாக இருக்கும் என கனடா நிதி அமைச்சர் அனிதா ஆனந்த் கூறியுள்ளார்.